செ.வெ.எண்:44 நாள்: 20.09.17

## பத்திரிக்கைச் செய்தி

---

**"கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 08.10.2017 அன்று கடலூரில் நடைபெறுகிறது".**

கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம், 08.10.2017 அன்று கடலூர் மஞ்சக்குப்பத்தில் உள்ள செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. இம்முகாமில் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு, கலை, அறிவியல், வணிகப் பட்டதாரிகள் மற்றும் ஐ.டி.ஐ., டிப்ளமோ படித்துள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம். இவ்வேலைவாய்ப்பு முகாமில் தனியார் துறையைச் சார்ந்த பல்வேறு நிறுவனங்கள் கலந்து கொண்டு பணியாளர்களைத் தேர்வு செய்ய உள்ளனர்.

விருப்பமுள்ள இம்மாவட்டத்தை சார்ந்த படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், www.ncs.gov.in என்ற இணையதளத்தில் தங்களுடைய விவரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். முகாம் தொடர்பான கூடுதல் விவரங்களை அறிய விரும்பும் இளைஞர்கள், கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு முகாம் வாயிலாக பணியாளர்களை தேர்வு செய்ய விரும்பும் வேலையளிப்பவர்கள், தங்களின் பணியாளர்களின் தேவை குறித்த விவரங்களை மேற்படி இணையதளத்தில் உள்ளீடு செய்வதுடன், கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் அவர்களை தொடர்பு கொள்ளமாறு தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேலைவாய்ப்பு முகாமின் வாயிலாக தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறும் மனுதாரர்களின் வேலைவாய்ப்பு பதிவு விவரங்கள் ரத்து செய்யப்பட மாட்டாது. இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள மனுதாரர்கள் தங்களின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம், கல்விச்சான்றிதழ்கள், ஆதார் அட்டை மற்றும் சுயக்குறிப்பு (Bio-Data) ஆகியவற்றின் அசல் மற்றும் நகலுடன் முகாமில் கலந்து கொண்டு பயன்பெற தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் பல்வேறு இலவச பயிற்சிக்களுக்கான பதிவும், இம்முகாமில் நடைபெறவுள்ளது இச்செய்தியினை கடலூர் மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த். மு. வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

[signature] 20/9/17

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்.

வெளியீடு :— செ.ம.தொ.அ.கடலூர்.